முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1671

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.04.2024**, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த குருராஜனே
   பரம ஆனந்த ஞான பலம் கொண்ட
   ஆறுமுகன் என் அவதார தேசிகனே
   ஐயனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உரைத்திடுவேன் குரோதி தகர் திங்கள் தன்னில்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 13 ம் நாள், 26.04.2024, வெள்ளிக்கிழமை)
   ஞானவான் அரங்கன் சொல் செயல் அத்தனையும்
   ஞாலமதில் சக்தியாக மாறி இனிதே
3. தானதர்ம லோகமாக உலகை மாற்றி
   தக்கபடி உலகோர்க்கு ஞானம் காட்டி
   காட்டியே கலியில் உலகமக்களெல்லாம்
   கடைத்தேற்றம் பெறுகின்ற வண்ணம் ஞானவான்களாக
4. அழியாமை பெற்று அரங்கன் தயவாலே
   அகிலத்தையே மாற்றுகின்ற ஞானவான்களாக ஞானிகளாக
   ஆகவே அடையாளம் கூடி இனிதே
   அற்புதத்தை அரங்கன் வேண்டலாக நிறைவேற்ற நேரும்
5. ஏற்புகொண்டு ஓங்காரக்குடில் நோக்கி
   இன்னும் உலக மக்கள் வந்துசேர்ந்தால் போதும்
   போதுமப்பா அப்பனே இந்த பூவுலகம்
   பெருமைமிக்க ஞான உலகமாக மாறி
6. ஞானவான்கள் தலைமை கொண்ட
   ஞானிகள் விரும்புகின்ற ஞான ஆட்சி
   ஞானசித்தர் காலமாகவே மாற்றி அற்புதத்தை கலியில் நடத்தக்கூடும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–